அலகு 7

# வாணிபச் சூழல்
# BUSINESS ENVIRONMENT

19
அத்தியாயம்

## சுற்றுச்சூழல் காரணிகள்
## ENVIRONMENTAL FACTORS

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.

–குறள் 462

**பொருள் :** ஆராய்ந்து சேர்ந்த இனத்துடன் (செயலைப்பற்றி) நன்றாகத் தேர்ந்து, தாமும் எண்ணிப்பார்த்துச் செய்கின்றவர்க்கு அறிய பொருள் ஒன்றும் இல்லை.

70QL5

### கற்றல் நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்**

- வாணிபச்சூழலின் பொருள்பற்றிய
- உட்புற மற்றும் வெளிப்புற வாணிபச் சூழலின் வேறுபாடுகள்.
- வாணிபத்தை பாதிக்கும் கட்டுப்படுத்த கூடிய மற்றும் கட்டுப்படுத்த முடியாத காரணிகள்.
- பொருளாதார, சமூக கலாச்சார, அரசியல் மற்றும் சட்ட, புவி சார்ந்த மற்றும் தொழில்நுட்ப காரணிகள் எவ்வாறு வணிகத்தை பாதிக்கிறது.

ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.

### அத்தியாயம் சுருக்கம்


19.01. வணிகச்சூழலின் பொருள் மற்றும் வரைவிலக்கணம்
19.02. வணிகச்சூழலின் வகைகள்
19.02.01. உட்புறச்சூழல்
19.02.02. வெளிப்புறச் சூழல்
19.02.03. நுண்ணியச் சூழல்
19.02.04. பரந்தச் சூழல்
19.03. வணிகத்தின் எதிர்காலச் சூழல்
19.04. பெருநிறுவன ஆளுகை
19.05. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி.


ஒரு வாணிகம் என்பது ஒட்டு மொத்த சமூக அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாகும். வணிகத்தைச் சுற்றியுள்ள அதே சமயம் வணிகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற உட்புற மற்றும் வெளிப்புற காரணிகளின் தொகுப்பே வணிக சுற்றுச்சூழல் ஆகும். உண்மையில் வணிக நிறுவனமானது தனித்து இயங்க முடியாது. அது நாட்டின் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சட்டத்துறைகளின் ஓர் பகுதியாகவும் விளங்குகின்றது. இவ்விசை வணிக நிறுவனங்களின் அனைத்து நடவடிக்கைகளுடன் நேரடித் தொடர்பு கொண்டவைகளாகும். இக்காரணிகள் அனைத்தும் நிறுவனத்தின் வெளிப்புறத்தோடு (External) தொடர்புடையவையாகும். எனவே, வணிக நிறுனங்களால் இவற்றில் எவ்வித மாறுதலையும் உண்டு பண்ண இயலாத, இவ்வெளிப்புறக் காரணிகளை வணிக நிறுவனங்களால் கட்டுப்படுத்த இயலாது. ஆயினும் வணிகக்கொள்கைகள், தந்திரங்கள் போன்றவற்றை வடிவமைக்கும் போது இவ்வித எதிர்மறைக் காரணிகளுக்கு தகுந்த முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

வணிக நிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகள் மற்றும் சக்திகள் நிறுவன வர்த்தக சூழலின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை செலுத்துகிறது. வணிகத்தில் மாற்றம் என்பது இயற்கையாகவே மாறிக்கொண்டே இருக்கும். எனவே வணிகத்திற்கு தொடர்புடைய பலம், பலவீனங்கள், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் (SWOT analysis) ஆகியவற்றின் மூலம் சுற்றுசூழலை பகுப்பாய்வு செய்த பின்னர் மட்டுமே எந்த வியூக முடிவும் எடுக்க முடியும்.




12th Commerce Tamil Unit 7.indd 152 19/12/2022 14:48:11